# KHALIFATHULLAH - PROPHET

## வெள்ளிக்கிழமை குத்துபா – 06–09–2013

## FRIDAY SERMON

## HAZRAT MUNIR AHMAD AZIM (A)

உலகனைத்துமுள்ள முஸ்லீம்களுக்கு சமாதான வாழ்த்துக்கள் தெரிவித்தப் பிறகு கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) இவர்கள் தஸ்கூதும், தஆவ்வஸூம் சூரா பாத்திகாவும் ஓதி இவ்வாறு கூறுகிறார்கள்.

மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்கள் இடையிலும் (அவரை எழுப்புவான்) அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவுள்ளவனும் ஆவான் (62:4)

மேற்கூறிய திருமறை வசனத்தின் அடிப்படையில் பார்த்தால், பிறகு தோன்றுகின்ற கலீபத்துல்லாஹ்வின் அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையைப்பற்றி நற்செய்தியளிக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு சிலவற்றை கூட இணைத்துப் பார்க்க வேண்டும். அதாவது பிறகு வருகின்ற நபர், தூதர் நபி(ஸ) வின் இரண்டாவது தோற்றவும் அன்னாரின் பிரதிபிம்பமாகவும் இருப்பார். பரிசுத்த குர்ஆனின் இந்த வசனம் இதைக்கூட உறுதிச்செய்கின்றது. அதாவது அவன் விண்ணிலிருந்து பூமிவரையிலும் தன் கட்டளையை தன் திட்டத்திற்கேற்ப நிலை நாட்டுவான். பின்னர் (ஒரு சுற்றை முடித்த பிறகு) அது ஒரு நாளில் அவனை நோக்கி மேலே சென்றுவிடுகின்றது. அந்த நாளின் அளவு உங்கள் கணிப்பிற்கு ஓராயிரம் ஆண்டுகள் ஆகும் (32:6).

முதல் காலகட்டத்தின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் பிறகு ஓராயிரம் ஆண்டுகள் இஸ்லாம் இருளின் பாதையில் வழிநடந்து செல்லும் என்பது மேல்கூறிய இறைவசனம் தெரிவிக்கின்றது. முதல் காலகட்டத்தில் இஸ்லாமின் பேரும் பெருமையும் மூன்று நூற்றாண்டுக்குள் முடிவடைந்து விடும் என்று ஹஸ்ரத் முஹமது (ஸ) அவர்கள் தீர்க்கதரிசனம் செய்திருந்தார்கள். முற்றிலும் சிறந்தது எனது நூற்றாண்டே ஆகும். அதற்கு பிறகு எனது தோழர்களின் நூற்றாண்டு அதற்கு பிறகு எனது தோழர்களின் தோழர்களுடைய நூற்றாண்டு.

வேண்டியதேயாகும். அந்த நிலையில் அவர் ஒரு நபியாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கலீஃபா என்றால் நபியே ஆவார். ஆகவே இஸ்லாமிக

நம்பிக்கையாளர்கள் இறைகிலாஃப்பத்தை பகுத்தறிய ஆசைப்படுகின்றார்கள் என்றால் ஒரு கலீஃபா தோன்றுவதோடு நபூவத்தும் தோன்ற வேண்டும். காலகட்டத்தின் கலீபாவை அல்லாஹ்வே தேர்ந்தெடுத்து அவனே நியமிக்கின்றான். அந்த கலீஃபா இறை தூதராகவே இருப்பார். இறைவனின் கலீஃபா அதாவது அல்லாஹ்வின் தூதர் என்று உரிமைகோரும் நபர் சரியத்துடைய நபியான ஹஸ்ரத் முஹமது(ஸ) வின் காத்தமுன் நபியீன் என்ற அருள் சமுத்திரத்திலிருந்தே உருவாகின்றார். வபாத்தான ஒரு கலீபத்துல்லாஹ்வை தொடர்ந்து வருகின்ற கலீபாவும், கிலாபத்தும் மறைந்து போன நபியின் போதனைகளை பின்பற்றுகின்றார் என்று மட்டுமே. ஆனால் வபாத்தான கலீபத்துல்லாஹ் ஆகிய முஹமது(ஸ) வையும் அஹ்மது (அ) மையும் பரிபூரணமாக பின்பற்றி அவர்களுக்கு கீழ்படிந்து வாழ்ந்தால் கிடைத்த அருளின் பலனாக இறைவனே நேரடியாக நியமிக்கின்ற கலீபாவுக்கே முக்கியத்துவவும் முதலிடவும் உள்ளது. அல்லாஹ்வே நியோகிக்கின்ற கலீபா என்ற நிலையில் அவர், நபி(ஸ)வுடையவும் அஹ்மது (அ) முடையவும் பிரதிபிம்பமாகவும் அவர்களின் பாதையை பின்தொடருகின்ற ஆளாகவும் இருப்பார்.

ஒரு கலீபத்துல்லாஹ்வின் வருகையின் நோக்கத்தை அதாவது இறைவன் கட்டளையால் பாரினில் ஒரு நபி ஆற்றிய கடமைகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக மக்களால் தேர்வு செய்கின்ற கலீபாவுடைய பதவி அர்ப்பமானதாகும். இரண்டும் நபித்துவத்தின் சட்டவட்டத்துக்குள் அமைந்த விஷயமே ஆகும். ஒன்று ஹஸ்ரத் முஹமது (ஸ) வுக்கு கீழ்படிந்து வாழ்ந்து கொண்டதின் பலனாக அல்லாஹ்வே நேரடியாக தேர்ந்தெடுத்து தன் மீது மாபெரும் கடமைகளை சுமத்தி அனுப்பிவைத்திருக்கும் நற்செய்தியை அவரே உலக மக்களிடத்தில் கூறிக்கொள்கின்றார். இரண்டு வபாத்தான கலீபத்துல்லாஹ்வின் பிறகு சபையால் தேர்வு செய்கின்ற கலீபாவின் அடிப்படையான கடமைகள், இஸ்லாமின் கொள்கையையும் சீர்திருத்தத்திற்காக தோன்றிய கலீபத்துல்லாஹ்வின் போதனைகளும் மார்க்க வேண்டுகோளும் ஆகும். மற்றொரு கலீபத்துல்லாஹ்வை அதாவது நிபியை இறைவன் எழுப்புகின்ற காலம் வரையிலும் இந்நிலை தொடர்ந்துக் கொள்ளும். இஸ்லாம் என்றென்றும் செழிப்பாயிருக்க அல்லாஹ் நாடுகின்றதால் இந்த இறைநடைமுறை இறுதிநாள் வரையிலும் நீடிக்க வேண்டும். அதற்காக அல்லாஹ்வே நேரடியாக தேர்வுசெய்கின்ற தூதர்கள் றூஹில்குத்துசுமாக இஸ்லாமின் போதனைகளையும், தத்துவங்களையும் மானிடகுலத்தை கற்பிக்க அவதரித்து கொண்டிருப்பார்கள் என்பதில் சற்றும் ஐய்யமில்லை.

எல்லாவகையிலும் தூதர் மன்னனான ஹஸ்ரத் முஹமது(ஸ)வை இறுதி நபியென பெரும்பாலான முஸ்லீம்கள் எண்ணி கொள்கின்றார்கள். காத்தமுன்நுபூவத்திற்கு அவ்வாறொரு தவறான விளக்கத்தை கொடுத்து கடந்த பதிநாலுநூற்றாண்டுகளாக நுபூவத்திற்கு ஒரு எல்லை நிர்ணயித்துள்ளார்கள். அவர்களின் நோக்கத்தில் இனி ஒரு நிலையிலும் நுபூவத்து இல்லை. நுபூவத்து இல்லாத காலம் வரையிலும் இறைகலீபாக்களும் தோன்றமாட்டார்கள்.

உலகின் பல்வேறு பகுதிகளின் இன்று நடைபெற்று வருகின்ற பல சம்பவங்களையும் மற்றும் சூழ்நிலைகளையும் முன்வைத்து கொண்டு இஸ்லாமிக உலகம் ஒரு கிலாபத் அமைப்பை உருவாக்க பலவேளைகளிலும் யோசிப்பதும் ஆசிப்பதும் உண்டு. உண்மையான இறை கிலாபத்து அமைப்பை தரிசிக்க அவர்கள் உள்ளபூர்வமாக விரும்புகின்றார்கள் என்றால் அவர்களின் தவறான எண்ணிக்கைகளால் உருவாக்கிய அதர்மத்தின் வட்டாரத்திலிருந்து இஸ்லாமிக உலகவும், அஹ்மதியா உலகவும் முதலில் வெளியேற வேண்டும். ஹஸ்ரத் முஹமது(ஸ)வுக்கு பிறகு ஒரு வகையிலான நபிமார்களும் தோன்றமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் முஸ்லீம்கள் நுபூவத்தின் கதவை அடைத்துவிட்டார்கள். முஹமது(ஸ) பிறகும் நபிமார்கள் தோன்றுவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரச்சாரம் செய்து வந்த அஹ்மதிகள் இன்று தங்களுடைய நம்பிக்கைக்கு முற்றிலும் மாறாக செயல்படுகின்றார்கள். பொது முஸ்லீம் உலகிற்கு நிகழ்ந்த தவறை இன்று ஹஸ்ரத் அஹ்மது(அ) மின் தோழர்களும் தங்களது தலையில் சுமந்து செல்கின்றன. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது (அ)க்கு பிறகு இறைகலீபாக்கள் தோன்றமாட்டார்கள் என்று இவர்களும் எண்ணிக்கொள்கின்றார்கள். பொது முஸ்லீம்களை போன்றே அஹ்மதிகளும் நுவூவத்தின் விஷயத்தில் அதர்மத்தின் இருளில் கிடந்து, தவிக்கின்ற நிலை உருவாகியது. இந்த இரண்டு கூட்டவும் அதர்மத்தின் இருட்டறையிலிருந்து வெளியேறி வந்து, இறையருளை உட்கொண்டு மகிழ்ச்சி அடையவேண்டும் என்பதே எனது விருப்பம். அவர்களின் அறியாய்மையின் காரணமாக செய்து வருகின்ற காத்தமே நுவூவத் காத்தமே மஸீஹ் மௌஊது என்ற தவறான விளக்கத்தின்பால் மறுபடியும் சிந்தித்து உண்மையின் பக்கம் திரும்பிக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் இந்த எளிய அடியானாகிய நானே இந்நூற்றாண்டின் கலீபத்துல்லாஹ்ம் மஸிஹ்ம் ஆவேன். எல்லாம் வல்ல இறைவன் கரங்களால் அமைக்கப்பட்ட ஜமாஅத்தேயாகும் சஹிஹில் இஸ்லாம் என்பதை இந்த உலகத்திற்கு முன்னால் நான் கூறிக்கொள்கின்றேன். இன்றைய உலகில் அருள்நிறைந்த ஒரு கலீபத்துல்லாஹ்வின் தலைமையில் இயங்குகின்ற ஒரே

ஒரு அமைப்பு ஜமா-அத் சஹிஹில் இஸ்லாம் மட்டுமே. இந்த கிலாபத் அமைப்பை அல்லாஹ்வே உருவாக்கியது ஆகும். இறைவன் அருளால் இஸ்லாமின் இறுதி வெற்றிக்கு வழிவகுக்கும் என்று உரிமை கோரிகின்ற ஜமாஅத்தே இது. அதாவது அல்லாஹ்வே அவனது கரங்களால் அமைத்துள்ள ஜமா அத்துல் சஹிஹில் இஸ்லாம்.

இத்தருணத்தில் மானிடகுலத்திடம் நான் தெரியப்படுத்த விரும்பி கொள்ளவது என்னவென்றால் மனிதகுலம் வாழும் இந்த பாரினில் இன்று அல்லாஹ்வின் ஒரு கலீஃபா இருக்கின்றார் என்பதாகும். ஆகையால் எனது வார்த்தைக்கு செவிசாய்த்து செயல்படவும் வாழவும் நான் முஸ்லீம் மக்களுக்கு அழைப்பு விடுவிக்கின்றேன். அவ்வாறு செய்தால் இந்த சமுதாயத்திற்கு அழகான எதிர்காலம் அமையும். இஸ்லாமின் வளர்ச்சியும் சமுதாயத்தின் ஒற்றுமையும் நிலைநிற்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றுகின்ற அல்லாஹ்வின் கலீஃபாவுக்கு கீழ்படிந்து கொள்ளும் வழியாகவே தான். இந்த சமுதாயத்தின் தலைவராக அல்லாஹ்வே அவனது பிரதிநிதியை நியமித்துள்ளான். அதனால் மனித கரங்களால் படைத்த வேறொரு கலீஃபாவுக்கும் இந்த சமுதாயத்தில் இடமேயில்லை.

பரிசுத்த நபி முஹமது(ஸ)வுடைய ஒரு தீர்க்கதரிசனத்தை நினைவில் கொள்ளுங்கள். எனது சமுதாயம் எழுபத்தி மூன்றாக பிரிந்து விடும். அதில் ஒன்று மட்டுமே உண்மையான ஜமா அத்து என்று. அந்த ஒரு ஜமா அத்தை தவிர்த்து மற்று எல்லா ஜமா அத்தும் இன்று மனித கைகளால் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இஸ்லாமிக பிரிவினர்களை சார்ந்த பண்டிதர்களும் அஹ்மதியா சங்கவும் இணைந்து இந்த நூற்றாண்டின் இறையருளைப் பற்றி நல்வர்களாகிய பொது மக்களின் உள்ளத்தில் விஷம் நிறைப்பது மட்டுமின்றி ஜமா அத்தே சஹிஹில் இஸ்லாமைப்பற்றியும் அல்லாஹ்வின் கலீஃபாவானா என்னைப் பற்றியும் நெறிகேடான வார்த்தைகளைக் கொண்டு பிரச்சாரம் செய்கின்றன. அதனால் உண்மையை பகுத்தறிய விரும்புகின்ற நடுநிலை உள்ளங்கொண்டோர்கள் இதன் உண்மையைக் குறித்து ஆழமாக படிக்கவும், சிந்திக்கவும் செய்யுங்கள்.

இறை வெளிபாடுகள் கிடைக்கின்ற கலீஃபாவின் மேன்மைப் பற்றி ஹஸ்ரத் முஹமது (ஸ)வின் நாலாவது கலீஃபாவாகயிருந்த ஹஸ்ரத் அலி(ர) இவ்வாறு கூறியிருந்ததாக காணலாம்.

கலீஃபத்துல்லாஹ்வின் போதனைகளை ஏற்றுக்கொண்டு அதர்கேற்றவர்போல் செயல்பட்டு வாழ்வது தவிர்க்க இயலாத விஷயமாகும். கொடிய நோய் காரணமாக வேதனையால் கதறி அழுகின்றவர்களிடத்திலிருந்து

ஓடிப்போகின்ற ஒருவரை போன்று நீங்கள் உண்மையான இமாமில் நின்று ஓடிக்கொள்ளாதீர்கள்.

சாத்தான் எல்லா லௌகீக இன்பங்களையும் காட்டி அழைத்துக்கொண்டிருப்பான். ஆரம்ப கட்டத்தில் மஹ்தி உதவியற்றவனும் இன்னல்கள் நிறைந்தவனும் எவராலும் அறியப்படாதவனுமாகவே இருப்பார். ஆற்றல் இழந்த ஒட்டகம் பூமியில் தலைசாய்த்து வாலடித்துக்கொண்டு கதறுகின்றது போலவே இஸ்லாமின் நிலை மிக பரிதாபமாகயிருக்கும். அந்நிலையில் அவன் (இறை கலீபா) பாரினில் இறையாட்சியை அமைப்பார்.

(ஷியா முஸ்லீம் வேல்ட் 1978-ல் வெளியிட்ட ஹஸ்ரத் அலீ(ர) வின் சொற்பொழிவுகளில் (நஹ்சில் பலாக) இருந்து எடுக்கப்பட்டது).

நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் அல்லாஹ் ஒளி நிறைப்பானாக! உண்மையை தேடுகின்றோர்களின் உள்ளங்களில் அல்லாஹ் ஒளிநிறைப்பானாக! காத்தமே நுபூவத்தைப் பற்றி தவறான நோக்கத்தோடு வாழுகின்றோர்களின் மனதை அல்லாஹ் நேர்மையாக்குவானாக! அல்லாஹ் உங்களின் உள்ளங்களை தூய்மையாக்குவான் என்ற எண்ணிக்கையோடு எனது பிரியமான அஹ்மதியா சகோதர சகோதரிகளுக்கு நான் ஒரு உபதேசம் கொடுக்கின்றேன். அதாவது கடந்த காலங்களில் தோன்றியிருந்த இறைதூதர்களும் நமது எல்லாமெல்லாமாகிய ஹஸ்ரத் முஹமது (ஸ)வும் ஹஸ்ரத் அஹ்மது (அ) மும் அனுபவித்த துன்பங்களும் துயரங்களும் வீணாககூடாது. அல்லாஹ்வின் தீனின் ஒளியை உலகெங்கும் பரவசெய்ய அவர்கள் ஏற்ற தியாகங்கள் ஏராளமானதாகும். ஏகனான அல்லாஹ்வின் மகத்துவத்தை அவர்கள் விளக்கி தந்தன. ஹஸ்ரத் முஹமது(ஸ) வின் சமுதாயம் இறுதி சமுதாயம் என்றதுபோல், இஸ்லாம் அல்லாஹ்வின் இறுதி தீனும் ஆகும். கடந்தகால மக்கள் அவரவர்கள் சமுதாயத்தில் சீர்திருத்தத்திற்காக தோன்றிய நபிமார்களின் மறைவுக்கு பிறகு வருகின்ற நபிமார்களின் வாசலை அடைத்திருந்தார்கள். ஹஸ்ரத் யுசுப் நபி (அ) மின் மக்கள் அவரை இறுதி நபியென நம்பிக்கை கொண்டதாக பரிசுத்த குர்-ஆன் கூறுகின்றது. யுசுப்நபிக்கு பிறகும் ஏராளமான நபிமார்கள் அவதரித்திருந்தார்கள். அம்மக்கள் ஒவ்வொரு தடவையும் எடுத்த தீர்மானங்கள் தவறானது என அல்லாஹ் நம்மை ஞாபகப்படுத்துகின்றான். மக்களை விதிக்க அல்லாஹ் எந்த மனிதர்களுக்கும் அதிகாரம் வழங்கவில்லை. அவன் நாடுகின்ற போதெல்லாம் இறை தூதர்களை எழுப்புகின்றான். அதுவாயிலாக மக்கள் தங்களின் அநாகரீக செயல்களிலிருந்து விலகிக் கொண்டு பாதை தவறாமல் உண்மையின் வழியாக பயணம் செய்வதற்கு. ஆகவே ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இந்த பூவுலகில் இருக்கும் காலம் வரையிலும்,

அதாவது மனித குலம் பாரினில் நிலைநிற்கும் நேரம் வரையிலும், இறைவனிலிருந்தும், அவனது மார்க்கத்திலிருந்தும், இஸ்லாமிலிருந்தும், அவனது கட்டளைகளிலிருந்தும், அவனது திருமறையிலிருந்தும் எப்போதெல்லாம் மனிதர்கள் தடம்மாறி செல்கின்றார்களோ அப்போதெல்லாம் அல்லாஹ்வே அவனது பிரதிநிதியை தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கின்றான். குறிப்பாக முஹமதீ சமுதாயவும் பொதுவாக மனித குலவும் ஏகனாகிய அல்லாஹ்வை மட்டும் வணங்குவதற்காக இறுதிநாள் வரையிலும் இந்த நடைமுறையை அவன் நீடிக்க செய்வான். ஒவ்வொரு கால கட்டங்களிலும், தோன்றுகின்ற தூதர்கள் இறைஞானக்கருத்தின் வாளால் பொய்தெய்வங்களை வெட்டி சாய்ப்பார்கள். உண்மையை ஏற்றுக்கொள்ள ஆவல்படுகின்ற உள்ளங்களுக்கு உண்மையை தரிசிக்கவும் அதை ஏற்றுக்கொள்ளவும் இறைவனின் தூய்மையான மார்க்கத்தில் இணைந்துக் கொள்ளவும் எளிதில் முடிந்துவிடும். அவர்கள் செல்லுகின்ற பாதைகளில் முட்கள் ஏராளமாகயிருக்குமென்றாலும் அவர்களின் தீவிரமான முயற்சியின் பலனாகவும் இறை உதவியின் விளைவாகவும் அந்த தூதரின் கூடவே பயணம் செய்து வாழ்க்கையின் உண்மையான லட்சியத்தின் பால் எட்டிவிடுவார்கள். தூய்மையானவனும் ஏகனாகியவனுமான அல்லாஹ்வை அடைந்து விடுவார்கள். இன்ஷா அல்லாஹ் ஆமீன். கடந்த காலங்களில் தோன்றிய நபிமார்களுக்கும் இறுதிநாள் வரையிலும் தோன்றுகின்ற நபிமார்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கும் இந்த திருகுர்ஆன் வசனத்தோடு எனது சொற்பொழிவை நிறைவுப்படுத்துகின்றேன்.

**எங்கள் பணி தூது செய்தியினை தெளிவாக எட்டவைப்பதே ஆகும் (36-18)**

அல்லாஹ் அவனது அருள்களால் உங்களை அனைவரையும் இரட்சிப்பானாக! ஆமென்.

Translated by
**Abdhul Sudheer**

Issued by: R. Jamaludin Raother Amir
*Jamaat Ul-SahihAl Islam, Kerala (Regd) India.*

Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com

Phone: 09789180817, 09447001832